BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



படம்: தமயந்தி

Bergen Tamilsk Avis - no.23 - December 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.23 மார்கழி - 2022

*வணக்கம்*

*புதிய ஆண்டு மலரவிருக்கிறது. 2023ஆம் ஆண்டு பிறக்க இருக்கிறது. விடைபெற்றுச் செல்லும் 2022ஆம் ஆண்டில் நாம் பல இன்பங்கள், துன்பங்கள், இழப்புகள், சவால்களைப் பலவழிகளிலும் சந்தித்து இருக்கின்றோம். பெருந்தொற்று நோய் மற்றும் பெரிய நாடுகளுக்கு இடையிலான யுத்தம் நம்மை மிகவும் பாதித்துள்ளமையினை குறிப்பிட்டே ஆக வேண்டும்.*
*பெருமளவிலான மக்கள் நோயுற்றுள்ளனர், பெருமளவிலான மக்கள் உயிரிழந்துள்ளனர், அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.*
*ஐரோப்பிய நாடுகளே 2022இல் அதிகம் இவ்வாறான இழப்புக்களை சந்தித்துள்ளன.*

*எத்தனை ஆயிரம் அகதிகளை தமது நாடுகளுக்குள் ஏற்றுக்கொள்வது?, அவர்களை எவ்வாறு தகுந்த முறையில் கையாள்வது? போன்ற விடயங்களே இன்று ஐரோப்பிய நாடுகளில் அதிகம் ஆராயப்படுகின்றன. அவைகளே அரசியல் அரங்குகளில் அதிகம் பேசப்படுகின்ற விடயங்களாக இருக்கின்றன. இதுவே மிகப் பெரும் சவாலாகவும் இந்நாடுகளில் காணப்படுகின்றது.*

*மலரும் புதிய ஆண்டில் மனித உயிர்களை கொடூரமாய் பறித்துச் செல்லும் பஞ்சம், பசி, நோய், யுத்தம் போன்றன நீங்கி புதிய உலகம் மலர்ந்து, மனிதம் தழைத்து, மனங்கள் மகிழ வேண்டும் என்ற ஆவலோடு தேன் தமிழிதழ் உங்களோடு பயணிக்க விரும்புகிறது.*

*எமது இனிய வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றோம்.*

*தேன் தமிழிதழ்*
*Ansvarlig redaktør: Julius Antoni*
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி - தொலைபேசி எண்: (47) 924 63 674



நோர்வேயில் தற்போது குளிர் காலமாகையால் பல பகுதிகளிலும் காலநிலை சீரற்ற தன்மையாயுள்ளது.

வழமை போலல்லாது வீதிகள் வழுக்கல் தன்மைகள் அதிகமாகி உள்ளன. இதனால் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன. பல வாகனங்கள் தடம் புரண்டுள்ளன. வீதி விபத்துக்களால் உயிர் இழப்புக்களும், காயமுறுவோரின் எண்ணிக்கையும் கூடிச்செல்கிறது.

எனவே வாகன ஓட்டுனர்கள் அதிக கவனமெடுத்து, நேரமெடுத்து வாகனங்களை ஓட்டும்படி வேண்டப்படுகிறீர்கள்.

## பல உக்ரேனிய நகரங்களில் ஏவுகணைகளைத் தாக்குதல்கள்.

கடந்த நாட்களில் உக்ரேனில் புதிய ஏவுகணைத் தாக்குதல்கள் பலமாக நிகழ்ந்துள்ளது. உக்ரைனின் பல நகரங்கள் பாரிய தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன.

ஏவுகணைகள் வான் மற்றும் கடலில் உள்ள கப்பல்களில் இருந்து ஏவப்பட்டு பல இடங்களை தாக்கியுள்ளது.

இவை பல சிவிலியன் இலக்குகளை இலக்காகக் கொண்டவை என்றும், முக்கியமான உள்கட்டமைப்பை அழிக்க திட்டமெனவும் தெரிய வருகிறது. அதேவேளை Kyiv நகரில் 40வீதமான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள லிவிவ் நகரில், நகரின் 90 சதவிகிதம் மின்சாரம் இல்லாமல் இருப்பதாக மேயர் Andrij Sadovyj தெரிவிக்கிறார்.


NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
31வருடகால ஊடகப்பணி




# அனைவருக்குமான கொண்டாட்டங்களை கொண்டாடுவோம்

– சிவா முருகுப்பிள்ளை.



பிறப்பும் இறப்பும் இயல்பானது. ஒரு முறை பிறந்து ஒரு முறை இறந்து என்று முடிவடைவதே விஞ்ஞானம். இதற்குள் உயிர்த்தெழுதல் என்பது இறக்காமல் இருத்தலினை இறந்ததாக நம்பி அது இல்லாமல் போய்விட்டதாகவே பார்க்க முடியும்.
இதற்குள் இருக்கும் மத நம்பிக்கைகளுக்குள் நான் செல்லவிரும்பவில்லை. மாறாக இதற்குள் இருக்கும் விஞ்ஞானத்தைப் பேசவிளைகின்றேன்... சமூக விஞ்ஞானத்தை பேசவிளைகின்றேன்.... இதனையும் பாலனின் பிறப்பையும், இறப்பையும் இணைத்துப் பார்க்காதீர்கள். அந்த நம்பிக்கைகள் அவரவர் சுதந்திரம்.
மக்களின் விடிவிற்காக தம்மை அர்ப்பணித்து சிறையில் அடைக்கப்பட்டவர்கள், போர் முனையில் தமது உயிரை விட்டவர்கள், சிலுவையில் அறையப்பட்டவர்கள், இதற்கும் அப்பால் தொடர்ந்தும் போராடி இயற்கையாக மரணித்தவர்கள் என்று பலரும் “உயிர்த்தெழுந்தவர்”களாக நாம் போற்றப்பட வேண்டியவர்கள்.

காரணம் இவர்கள் இந்த மனித குல விடிவிற்காக போராடியவர்கள் தம்மை அர்பணித்தவர்கள். அவர்களுக்கு வைக்கும் சிலையும், திரு உருவப்படமும் அவரின் புகழ்பாடுவதற்காக அல்ல, இதற்கு அப்பால் அவர் சார்ந்திருந்த கொள்கை கோட்பாடு செயற்பாட்டை அடையாளப்படுத்தும் சின்னங்களாகப் பார்கப்பட வேண்டும்... மதிக்கப்பட வேண்டும்.... மாறாக இவை வழிபாட்டுகுரியவை அல்ல.

இதில் சுடலையில் பிறந்து, மலை முகட்டில் வேலை செய்து, ஏதோ ஒரு கிராமத்தில் பிறந்து எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அடையாளம் அற்று இறந்த பலரும் சிலைகளாவோ அல்லது வீட்டிற்கு அப்பால் திரு உருவப்படங்களாகவோ பொது வெளியிற்கு வந்தது அதிகம் இல்லை. இவர்கள் ஆற்றிய சமூகக் கடமைகள் அதிகம் பேசப்படுவதில்லை. ஆனால் அவரின் பெயர் சொல்லாமல் அவர் சார்ந்த கொள்கையும், கோட்பாடுகளும், செயற்பாடுகளும் இன்னொருவர் மூலமாக சமூகமாக தொடர்ச்சியாக செயற்பாட்டிற்குள் இருந்து கொண்டு பயணம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அதுதான் இயங்கியல்.

எனவேதான் கூறுகின்றோம் சிலுவையில் அறையப்பட்டவர்களும், அவதாரங்கள் எடுத்தவர்கள் என்று நம்பப்படுவர்களும், சிலுவையை சுமந்தவர்களும், புட்டுக்கு மண் சுமந்தவர்களும் என்று ஆங்காங்கே வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைவரின் பிறப்புக்களையும் அவர்களின் கொள்கை, கோட்பாடுகள் செயற்பாடுகளின் அடிப்படையில் அவை இந்த மனித குலத்தின் முன்னேற்றத்திற்கான செயற்பாடாக அமைந்தாக இருப்பதினால் கொண்டாடுவோம்.

அந்த கொண்டாட்டத்திற்குரிய நாட்களாக வருட முடிவின் இந்த கிழமையை நாம் கொண்டாடினால் அது சிறப்பாக இருக்கும். அந்தக் கொண்டாட்டம் மனிதகுலத்தின் அனைவருக்குமான கொண்டாட்டமாக மாற்றுவதற்கான சமத்துவ சிந்தனைக்கு நாம் கொடுக்கும் அங்கீகாரமாக... ஏற்புடமையாகவே எம்மால் கருதப்பட்டு அதற்கானதாக பேணப்பட வேண்டும். இதில் இணைந்த கரங்களாக நாம் இந்த வருட இறுதிப் பண்டிகைக் காலங்களை வரையறுத்துக் கொள்வோம்.
அனைவருக்கும் பண்டிகை தின வாழ்த்துகள் •




**வெளிநாட்டுப்பணம் செல்லாக்காசு, பெறுமதியற்றுப் போகிறது என்ற கவலையெல்லாம் வெளிநாட்டவர்களுக்கு கிடையாது. அற்ப சந்தோசங்களுக்காக சமூகத்தைச் சீரழிக்கிறார்கள் என்ற குற்றசாட்டுக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது.**
**சமூக உணர்வுள்ள மாணவர்களுக்கே உதவி!**
**உணர்வுகளை ஊட்டி வளர்ப்போம்!!**

*இன்றைய காலை உரையாடல் இவ்வாறு அமைந்தது.*
*“அவையள் உதவி செய்யிறது நல்ல விசயம். அதுக்காக பிள்ளையளப்போட்டு அளவுக்கதிமாய் வருத்தக்கூடாது..”*
*“என்ன வருத்தீனம்?”*
*“ஒரு அய்யாயிரம் ரூபாவைக் குடுத்துப்போட்டு ஆயிரத்தெட்டுக்கேள்வி கேக்கினம்..”*
*“என்ன கேக்கினம்?”*
*“நீ படிச்சு நல்ல நிலமைக்கு வந்தாப்பிறகு, இதேபோல நீயும் ஒரு பிள்ளைக்கு உதவவேணும்”*
*“நல்ல விசயம் தானே!”*
*“நீ இந்த உதவி எடுக்கிறதெண்டால் 1-2 மணித்தியாலம் வேலை செய்யவேணும்?”*
*“ஒரு நாளைக்கோ? அது கொஞ்சம் கஸ்ரம் தான்”*
*“இல்லை ஒரு கிழமைக்கு 1-2 மணித்தியாலம்”*
*“அதுகும் நல்ல விசயம்தானே! பிள்ளை, தான் சும்மா காசு வேண்டுறன் என்ற தாழ்வுச்சிக்கல் ஏதும் இல்லாமல், உதவியைப்பெற நல்ல வழி. அது சரி, என்ன வேலை செய்யச்சொல்லி கேக்கினம்? வேலை கடுமையோ?”*
*“தங்களுக்கு கீழ் வகுப்பில படிக்கிற ஒரு பிள்ளைக்கு உதவட்டாம்! அந்தப் பிள்ளைக்கு படிக்கிறதில இருக்கிற சின்னச்சின்ன தடையள எடுத்துவிடட்டாம்! மொத்தத்தில அந்தப்பிள்ளை படிக்கிறதுக்கு ஊக்கப்படுத்தட்டாம்!!”*

“நல்ல திட்டமாயிருக்கே! ஒருவர் இன்னொருவருக்கு கற்பிக்கும்போது இருவர் கற்றுக்கொள்கின்றனர். அதோட அடுத்தவருக்கு உதவும் சமூக உணர்வும் வளர்த்தெடுக்கப்படுகுது. இந்த உணர்வு இருக்கிறதாலதான் ஆரோ அவைக்கு உதவு-கினம்”



“ஓ..நல்ல விசயம் தான். ஆனால் யுனியில படிக்கிற ஒரு பிள்ளைக்கு எவ்வளவு படிக்க இருக்கு. எவ்வளவு வேலை இருக்கு. அதுக்குள்ள இவயின்ர பிச்சைக் காசுக்கு அந்த அறிக்கை தா! இந்த அறிக்கை தா!! எண்டா...அதுகள் பாவமில்லையே!”

“இல்லை பாவமில்லை. ஐயாயிரம் ரூபா உங்களுக்கு பிச்சைக்காசு! அதாவது வருசம் 60ஆயிரம் ரூபா பிச்சைக்காசு! இருக்கட்டும்!! கிழமைக்கு 1-2 மணித்தியாலம் ஒதுக்கமுடியாத படிப்பு கண்டறியாத படிப்பு. அவையள் படிச்சும் ஒண்டும் கிழிக்கப் போறதில்லை. அப்பிடியான ஆக்களுக்கு உதவவேணுமெண்ட எந்த அவசியமும் அவையளுக்கில்ல”

“சிலபேர் மடிக்கணினி வேண்டிக் குடுத்தினம். குடுத்துப்போட்டு சும்மா இருக்குதுகள். இவை என்னடா எண்டா அது லோனாம்”

“விளங்கேல்ல”

“அதாவது தாங்கள் மூண்டு லட்சத்துக்கு ஒரு மடிக்கணணி வேண்டித் தரலாமாம். ஆனால் இவை படிச்சு முடிச்சு ஒரு வேலைக்குப் போனாப்பிறகு. இவை ஒரு கணினி வேண்டிக் குடுக்கவேணுமாம்”

“இதுகும் நல்லா இருக்கே! நீங்கள் ஏன் தேவையில்லாமல் கொந்தளிக்கிறியள். உதவியள் சும்மா செய்யக்கூடாது. ஏன் செய்யவேணும் எண்டு மாத்தி யோசிச்சுப்பாருங்கோ. உதவி செய்யிறவை ஏதோ ஒரு நல்ல நோக்கத்திலதான் செய்யினம். அதை துஷ்ப்பிரயோகம் செய்யக்கூடாது.”

பல செய்திகள் உதவிகள் செய்பவர்களின் மனங்களை நோகச்செய்கின்றன.

“ஓ..அவை நல்ல நோக்கத்தில ஒண்டுஞ்செய்யேல்ல்ல. எல்லாம் விளம்பரத்துக்குத்தான் செய்யினம்!”

“ஓம். அவைக்கு இதுகும் வேணும். இன்னமும் வேணும். நீங்கள் இவ்வளவு நேரமும் கதைச்சதைப் பாக்கேக்க அப்பிடித் தெரியேல்ல. விளம்பரத்துக்கும் ஆக்கள் செய்யினம்தான். ஆனாலும் அவையளுக்குள்ளாலயும் யாருக்கோ தேவையானவைக்கு உதவி போய்ச்சேருது என்றும் திருப்தியடையலாம்!”

உதவுபவர்கள் பலரகம்.

1. புண்ணியம் தேட உதவுபவர்கள்
2. தாங்கள் சிறுவயதில் பட்ட கஸ்டத்தை உணர்ந்து உதவுபவர்கள்.
3. ஏதோ கேட்கிறார்கள். “இல்லை” என்று சொல்லமுடியாத நிலையில் உதவுபவர்கள்
4. தம்மை விளம்பரப்படுத்த உதவுபவர்கள்.
5. நாட்டில் இலவசக் கல்வியைப் பெற்றுவிட்டு தப்பிஓடிவந்த குற்ற உணர்வில் உதவுபவர்கள்

இவ்வாறு பலவேறு வகையினர் உதவுகிறார்கள்.

இந்த உதவிகள் சரியான வழிவகைகளில் சென்றடைகின்றனவா?
மாணவர்கள் உண்மையில் பயன் பெறுகின்றனரா? என்ற கேள்விகள் உதவுபவர்கள் மனதில் அழுத்தம் பெற்றுவருவது நல்லவிடயம்.
மாணவர் நலனில் அக்கறை கொள்பவர் மனதில் எழும் இக் கேள்விகள் தவிர்க்க முடியாதவை.
அங்கிருந்து கிடைக்கும் சில தகவல்கள் அவர்களை காயப்படுத்துகின்றன. சோர்வடையச் செய்கின்றன.
தமிழர்களின் புலப்பெயர்வின் பின் சமூகத்தில் நிலவும் சில அசாதாரண வேண்டத்தகாத மாற்றங்கள் கவலையளிப்பதாக சில சமூகநலன் விரும்பிகள் கவலைகொள்கின்றனர். இன்னும் சில முக்கிய பிரமுகர்கள் "தயவு செய்து இங்கே நீங்கள் பணம் அனுப்பவேண்டாம். உங்கள் பணங்களே இங்குள்ளவர்களை சோம்பேறிகளாக்குகின்றது. தேவையற்ற துர்ப்பழக்கங்களுக்கு ஆளாக்குகின்றது. இடம் பொருளறிந்து கொடுங்கள்!" என்று மன்றாட்டமாகக் கேட்கிறார்கள்.
சமூக அக்கறையோடு, இவற்றையெல்லாம் காதில் போட புலம்பெயர்ந்தவர்களுக்கு எங்கே நேரம்? ஏதோ! கேட்டதையும், கேட்காததையும் கொடுத்துவிட்டுப் பிரமுகராகிவிடுகிறார்கள். அல்லது சோர்வடைகிறார்கள்.
பல மாணவர்களுக்கு எங்கிருந்து எப்படி யார் உதவுகிறார்கள் என்று எதுவுமே தெரியாது. அவர்களுக்கு அவற்றை அறிந்துகொள்ளவேண்டுமென்ற அக்கறையும் கிடையாது.
ஏதோ வெளிநாட்டிருந்து பணம் வருகிறது. வரும் வரையில் லாபம் என்ற அளவில்தான் இருக்கிறார்கள்.
வெளிநாட்டுப்பணம் செல்லாக்காசு, பெறுமதியற்றுப் போகிறது என்ற கவலையெல்லாம் வெளிநாட்டவரகளுக்கு கிடையாது. அற்ப சந்தோசங்களுக்காக சமூகத்தைச் சீரழிக்கிறார்கள் என்ற குற்றசாட்டுக்கு அவர்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது.
பொருளாதாரரீதியில் பலம் பெற்ற, தங்கள் பிள்ளைகளுக்கும் இனித் தேவையில்லை என்றுணர்ந்த பலர் "கொடுத்து"ப்புண்ணியம் தேட விரும்புவது ஒருவகையில் நல்ல செயல்தான். ஆனால் பொறுப்போடு செய்ய வேண்டுமென்பதே அவர்களது வேண்டுகோள்..
கையேந்தும் கலாசாரத்தை அங்குள்ள அறிவுஜீவிகள் கடுமையாக எதிர்க்கிறார்கள். கூச்சப்படுகிறார்கள். சுயபலத்தில் நிற்க அறிவுறுத்துகிறார்கள். யார்தான் கேட்கிறார்கள்?
ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலிருந்தே இக்கலாசாரம் வளர்த்தெடுக்கப்படவேண்டும். ஆனால் வேலியே பயிரைமேயும் நிலைதான் பல இடங்களில் காணப்படுகிறது.
நன்றியுணர்வற்ற மாணவர் சமூகம் நல்ல நிலையை எட்டமுடியாது. இந்த சமூகத்திற்கு ஏன் வலிந்து உதவவேண்டும் என்ற கேள்வியில் நியாயமிருக்கிறது.
இதே வேளை உண்மையில் உதவி தேவைப்படும் மாணவர்கள் கரம் பற்றித் தூக்கிவிடவேண்டிய கடப்பாடு வாழ்வில் மேல்நிலையிலுள்ளளோருக்கு இருக்கிறது. இது புலம்பெயர்ந்தவர்களுக்கு மட்டும் உரிய கடமையல்ல.
யாருக்கும் உதவிகள் சும்மா வழங்கப்படக்கூடாது.
கடன் அடிப்படையிலோ அல்லது சிறிய சிறிய நிபந்தனைகளின் அடிப்படையிலோ தான் உதவிகள் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் சரியான மாணவர்களை இனங்காண முடியும். ஒரு பொறுப்புள்ள சமூத்தைக் கட்டி எழுப்பமுடியும்.
ஆனாலும், இது சாதாரண விடயமல்ல. நடைமுறையில் சிரமமானது. சமூக அக்கறையற்றவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கமாட்டார்கள். தேவைற்ற கதைகளை மிகைப்படுத்தி குழப்புவார்கள்.
நல்லது செய்ய நினைப்பவர்கள் போராடித்தான் ஆகவேண்டும்! □

## தாயின் குரல்



மீண்டுமொருநாள்
என் முன்பாக, மரக்கிளையொன்றில்
பறவையொன்று வந்தமர்ந்து கொண்டது
தனது கூரிய அலகினால்
என் கன்னப்பொட்டில்
மெலிதாக கொத்தியது
அறிவேன்,
இறந்து போன என் அன்னையிடமிருந்து
செய்தியொன்றை சுமந்து வந்துள்ளது.


அம்மா,
நீயே என்னை ஆள்பவளாக இருக்கின்றாய்,
என்னுடன் நீ பேசுகின்றாய்.
என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்.
எழு,
எழுந்து நில்,
எழுந்து நிமிர்ந்து நில்,
நீ உரத்துச் சொல்கின்றாய்.
காற்றினூடு
உனது குரலைக் கேட்கின்றேன்
சூரியனது ஒளிக்கிரணங்களிலும்
பறவைகளின்
பாடும் ஒலியிலும்
உனது குரலை நான் உணர்கின்றேன்.
எனது
நாடித் துடிப்பினூடே
என்னோடு நீ வாழ்கின்றாய்.

**மரிய தக்வாம் : நோர்வேஜிய மூலம்.**
**தமிழில்: பானுபாரதி**



நீண்ட காலமாக உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த கால்பந்து வீரர் Pele காலமானார். 82 வயதான இவர் டிசம்பர் 29 வியாழன் அன்று நோர்வே நேரப்படி 19.27 மணிக்கு உயிரிழந்துள்ளார் என மருத்துவமனை கூறியதாக செய்தி வெளியாகியுள்ளது.

பிரேசில் கால்பந்து ஜாம்பவான் கடந்த ஆண்டு குடல் புற்றுநோயால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து அவரது உடல்நிலை மிகமோசமாகவிருந்தது. சிகிச்சைகள் எதுவும் பலன் தராத நிலையில் இவர் மரணமடைந்துள்ளார். பிரேசில் நாட்டின் கால்பந்தாட்ட வீரன் Pele என்று உலகமே அழைத்து நிற்கும் Edson Arantes do Nascimento அவர்கள் கால் பந்தாட்ட உலகின் மன்னனாகத் திகழ்ந்தவர். 1940 ஒக்டோபர் 23ம் நாளன்று பி-ரேசில் Tres Coracoes என்னுமிடத்தில் பிறந்தவர். 1958இல் ஸ்வீடனில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் (VM) பிரேசில் அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது. இப்போட்டியில் 17வயதான Pele மிகவும் துடிப்பாக விளையாடி, தனது பெயரினை உலக அரங்கில் பதித்தார். அன்றிலிருந்து அவர் மிகவும் நுட்பமாக விளையாடி உலகிலுள்ள அனைத்து கால் பந்தாட்ட வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் ஒரு சிறந்த கதாநாயகனாகத் திகழ்ந்து வருகிறார். விளையாட்டுத் திறன் மட்டுமல்லாது மனிதநேய மனமும், சக வீரர்களை மதிக்கும் குணமும் கொண்டதன்னாலேயே Pele என்ற வீரனுக்கு உலகமே தலை வணங்கி நிற்கிறது.□




# பாரதி - 140

-ஹம்சத்வனி.

மகாகவி பாரதியாரின் இந்தப் படம்
வரையப்பட்டது 2014இல்.
வரைந்தவர் ஓவியர் T.செளந்தரின் மகன்
14வயதுச் சிறுவனான ஷாருகேஷ்.

பாரதி
கனவு போன்ற நனவில் தோன்றினான்.
அதே மீசை
அதே ஒளிபடைத்த கண்ணுமாய்.

வணக்கம் பாரதி என்றேன்.
சிரித்தான்
அண்டங்கள் அதிர்ந்தன.

உனது கவிதைகள் சாகாவரம்
பெற்றவை என்றும்;
அவற்றின் தேவை இன்றும் உள என்றேன்.
சினந்து வெடித்தான்
அக்கினிக்குஞ்சுகள் ஆயிரம்
சிதறிப்பறந்தன.


இன்னும் மக்கள் சாதி சகதியில்
புரள்வதும்;
அவனது பாரதமாதாவை
காந்தி நேரு முதலிலும்
பின்வந்த அத்தனை அரசியல் காமுகரும்
கற்பழித்து தொங்க விட்டதாய்
சொன்னேன்.

இப்போது அவள் ஏதிலியாய்
வீதிவீதியாய், தன்னை விற்று
விபச்சாரியாய் அலைகிறாள்
என்றேன்

மானிடப்பதரே!
என்று கர்சித்து என் கன்னத்தில்
அறைந்தான்.
தடவியபடியே
கவியே!
எனைநீ கொன்று தகிக்கினும்
இதுவே உண்மை என்றுரைத்தேன்.
தலையில் அடித்து
தரையில் புரண்டு அழுதான்.
காலனை காலால் உதைத்த கவி
கண்ணீர் விடுவது
கண்டு மனம் சகிக்கேன்.
அருகில் சென்றேன்
விண்ணை தாண்டிய பேருருவாய்
நிமர்ந்தான்.
நிலவை பொடி செய்து
நெற்றியில் பூசினான்.
சூரியனை எரிக்கிறேன் என்று
பறந்தான்; மறைந்தான்.

# புவி வெப்பமடைதல்:

# பொறுப்புடன் செயற்படுவது எப்போது?




தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை நாமெல்லோரும் அனுபவிக்கின்றோம். அண்மையில் வெளியான "உமிழ்வு இடைவெளி அறிக்கை 2022: மூடும் சாளரம் - காலநிலை நெருக்கடி சமூகங்களின் விரைவான மாற்றத்திற்கு அழைப்புவிடுக்கிறது" (Emissions Gap Report 2022: The Closing Window – Climate crisis calls for rapid transformation of societies) அறிக்கையானது, காலநிலை மாற்றத்தைக் கையாள்வதற்கான பாதையிலிருந்து உலகம் மிகவும் விலகிச் செல்வதை உறுதி செய்கிறது. 2015ம் ஆண்டு பாரிஸ் நகரில் எட்டப்பட்ட காலநிலை இலக்குகள் எட்டப்படமுடியாதவை என்றும் அரசியல்வாதிகள், அறிவியலாளர்கள், கொள்கைவகுப்பாளர்கள் ஆகியோர் தொடர்ந்தும் பொய் சொல்வதை நிறுத்த வேண்டும் என்றும் அவ்வறிக்கை கோருகிறது. எல்லோரும் சொல்லிவருகின்ற உலக வெப்பநிலை அதிகரிப்பை 1.5°C க்குள் கட்டுப்படுத்துவது என்ற இலக்கு சாத்தியமற்றது என்றும் இப்போது முதல் விரைவாகவும் வினைத்திறனுடனும் செயற்பட்டால் மட்டுமே 2.8°C க்குள் புவியின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தவியலும் என்றும் கூறுகிறது.

இது ஒரு ஆபத்தான அறிக்கை. இது 1.5டிகிரி வெப்பமயமாதலைத் தவிர்ப்பதற்கான சரியான பாதையில் நாம் எங்கும் இல்லை என்பதை எச்சரிக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் காபனீரொக்சைட்டின் உமிழ்வைக் குறைப்பதில் நாம் கவனஞ்செலுத்தவில்லை என்றும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அவ்வறிக்கை நமக்குச் சொல்கிறது. பல அரசாங்கங்கள் 2050க்குள் தங்கள் காபனீரொக்சைட் வெளியீட்டை முழுமையாக நிறுத்தி "பூஜ்ஜிய உமிழ்வை" அடைவதாக உறுதியளித்துள்ள நிலையில், அவர்கள் அதைச் செய்வதற்கான பாதையில் இல்லை என்பது தெளிவாகிறது. இதேவேளை கடந்த ஆண்டு வெளியான காலநிலை மாற்ற அறிக்கை ஒவ்வொரு அரை டிகிரி வெப்பமயமாதலும் அதிக வெப்ப அலைகள், வறட்சிகள் மற்றும் வெள்ளங்களை ஏற்படுத்துகிறது என்பதை நிரூபித்தது. காபனீரொக்சைட், மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஒக்சைடு அளவுகள் அனைத்தும் கடந்த ஆண்டு சாதனை அளவு அதிகரித்துள்ளதாக உலக வானிலை அமைப்புத் தெரிவித்துள்ளது. நாம் தவறான பாதையில் செல்கிறோம் என்று எல்லா ஆதாரங்களும் தெரிவிக்கின்றன.

2010ம் ஆண்டுக்கும் 2019க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 15.5 மில்லியன் பாகிஸ்தானியர்கள் இயற்கை பேரழிவுகளால் இடம்பெயர்ந்துள்ளனர். உலகளாவிய காபனீரொக்சைட் வாயு வெளியேற்றத்தில் பாகிஸ்தான் 1 சதவீதத்திற்கும் குறைவான பங்களிப்பையே வழங்கியுள்ளது. ஆனால் காலநிலை நெருக்கடியில் முன்னணியில் உள்ளது. இது தெளிவாகச் சொல்கின்ற செய்தி ஒன்றுதான். குறைவாக காபனீரொக்சைட்டை உமிழும் நாடுகள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன. இது காலநிலை நீதி (Climate Justice) குறித்த அடிப்படையான வினாவொன்றை எழுப்புகிறது. வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகள் அதிகளவில் காபனீரொக்சைட்டை உமிழ்கின்றன. ஆனால் மிகக் குறைவாக உமிழும் வறிய மூன்றாமுலக நாடுகள் காலநிலை மாற்றத்தின் கொடிய விளைவுகளை எதிர்நோக்குகின்றன. இது என்ன நியாயம்?

கேள்வி யாதெனில் தவறு எங்கே உள்ளது என்பதே. இந்த நெருக்கடியின் அடிப்படையாக அமைவது இலாபவெறியும் நுகர்வுப் பண்பாடுமே. இலாபத்திற்கான அவா தொடர்ச்சியாக சுவட்டு




எரிபொருட்களின் பாவனையைத் தொடர்வதற்கும் அதிகரிப்பதற்கும் வழிசெய்கிறது. நாம் என்ன சாப்பிடுகிறோம், எப்படிப் பயணம் செய்கிறோம், மின்சாரத்தை எப்படிப் பயன்படுத்துகிறோம் போன்றன முக்கியமானவை. வளர்ச்சியடைந்த நாடுகளில் செல்வமுள்ள 1%த்தினர் ஆண்டொன்றுக்கு உமிழும் காபனீரொக்சைட்டின் அளவு அதே நாடுகளில் வாழும் வறிய 10%த்தினர் இருபது ஆண்டுகளுக்கு உமிழும் காபனீரொக்சைட்டின் அளவுக்கு சமமானது. இது இந்நெருக்கடியின் மையத்தைக் கோடுகாட்டுகிறது. இந்த "மாசுபடுத்தும் உயரடுக்கே" அரசியல்வாதிகளாகவும் வியாபாரிகளாகவும் கொள்கைவகுப்பில் செல்வாக்குச் செலுத்துவோராகவும் உள்ளனர். இவர்கள் மூன்றாமுலக நாடுகளும் அடித்தட்டு மக்களும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கோருகிறார்கள். இவர்கள் சுவட்டு எரிபொருட்களின் தொடர்ச்சியான உற்பத்தி பற்றியோ அதனால் ஏற்படும் சூழப்பத்தை சுத்தம் செய்ய கட்டாயப்படுத்துவது பற்றியோ பேசுவதில்லை. இதேவேளை பல சுற்றுச்சூழல் கொள்கைகள் பொருளாதார "ஒட்டும் பிளாஸ்டர்கள்". அவை தொழிநுட்பசார் தீர்வுகளிலே கவனம் செலுத்துகின்றன. நுகர்வை மையமாகக் கொண்ட சமூகங்களின் பண்பாட்டில் ஆழமான மாற்றத்திற்கான தேவையை புறக்கணிக்கின்றன.

பெருந்தொற்றுக்குப் பின்னரான உரையாடல் "பொருளாதார வளர்ச்சி" பற்றியதாக இருக்கிறது. அவர்கள் தங்கள் இலாபத்தைப் பெருக்குவதிலேயே குறியாக இருக்கிறார்கள். அதற்காக மேலும் மேலும் சுவட்டு எரிபொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். உற்பத்தியும் நுகர்வும் என்ற கொடிய சுழலைத் தொடர்ந்து இயக்கியவண்ணமே இருக்கிறார்கள். சாதாரண மக்கள் இதற்குப் பலியாகிறார்கள். இன்று உலகெங்கும் உள்ள காலநிலை மாற்றத்தின் கொடிய விளைவுகளை அனுபவிப்பவர்கள் எளிய மக்களே. பெருவணிகத்துக்கும் ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரலுக்கும் உட்பட்டு மூன்றாமுலக நாடுகளையும் மக்களையும் சுரண்டும் இந்த முறையை மாற்றாமல் எமக்கு விடிவில்லை.

ஆண்டுதோறும் காலநிலை மாநாடுகள் நடைபெறுகின்றன. உடன்படிக்கைகள் எட்டப்படுகின்றன. ஆனால் அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. 2015ம் ஆண்டு பாரிஸ் நகரில் எட்டப்பட்ட உடன்படிக்கை "சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது" என்று புகழப்பட்டது. ஆனால் ஏழு ஆண்டுகள் முடிவில் உலகம் வேறெங்கோ நிற்கிறது என்ற உண்மை மீண்டுமொருமுறை உரக்கச் சொல்லப்படுகிறது. ஆனால் அரசுகள் முதல் அமைப்புகள், நிறுவனங்கள் வரைத் தொடர்ந்து பொய்யுரைக்கின்றன. இன்னமும் புவி வெப்பநிலை அதிகரிப்பை 1.5°C க்குள் கட்டுப்படுத்த முடியும் என்ற பொய்யைப் பரப்புகின்றன, மக்களை நம்ப வைக்கின்றன.

இவர்கள் எல்லோரும் சொல்லாமல் மறைக்கின்ற செய்திகள் சிலவுண்டு.
எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் காலநிலை மாநாடு கடந்தமாதம் நடைபெற்றது. இம்மாநாடு அடிப்படையில் சுவட்டு எரிபொருட்களின் பாவனையைக் குறைப்பதைப் பற்றியது. எண்ணெய் எடுத்தல், நிலக்கரி பயன்பாடு போன்றவற்றை நிறுத்துவதைப் பற்றியது. ஒரு வகையில் இம்மாநாடுகள் எண்ணெய் நிறுவனங்களுக்கும் நிலக்கரி அகழ்வோருக்கும் எதிரானவை. இம்முறை மாநாட்டின் அனுசரணையாளர்களில் பெரும்பான்மையானவை எண்ணெய் நிறுவனங்கள். எண்ணெய் நிறுவனங்கள், எண்ணெய் உற்பத்தியை நிறுத்தக் கோரும் மாநாட்டுக்கு ஏன் அனுசரணை வழங்குகிறார்கள்?

இம்மாநாட்டில் சுவட்டு எரிபொருட்களுக்கு ஆதரவான செயற்பாட்டாளர்கள் (Fossil lobbyists) 636பேர் பங்கேற்றதாக Global Witness/London அமைப்பு கண்டுபிடித்து வெளிக்கொண்டு வந்துள்ளது. காலநிலை மாநாட்டில் சுவட்டு எரிபொருள் லொபியிஸ்டுகளுக்கு என்ன வேலை? இவை இவ்வகையான மாநாடுகளின் ஏமாற்றுத்தனத்தை காட்டி நிற்கின்றன.

இம்முறை மாநாடு, இந்த காலநிலை மாநாட்டு மரபின் தன்மையை வெளிக்காட்டி நின்றது. இந்தக் காலநிலை மாநாடுகள் ஆண்டுக்கொருமுறை நடத்தப்படும் திருவிழாக்கள். அவ்வளவே. சுவட்டு எரிபொருட்கள் பற்றிப் பேசப்பட்டாலும் நடைமுறையில் அதன் பயன்பாட்டைக் குறைப்பதற்கான முறையான ஒப்பந்தம் இன்றுவரை எட்டப்படவில்லை. 2023ம் ஆண்டுக்கான காலநிலை மாநாடு எண்ணெய் உற்பத்தியின் மையப்புள்ளிகளில் ஒன்றாகக் கருதப்படும் டுபாயில் நடைபெறவுள்ளது மிகப்பெரிய முரண்நகை.
இந்தக் காலநிலைப் பேரழிவிற்கு காரணமானவர்கள் வளர்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். காலநிலை மாற்றத்தை உண்டாக்குவது உலகின் ஏழைகள் அல்ல. சுற்றுச்சூழல் நெருக்கடி எந்த வகையிலும் மக்கள்தொகை அதிகரிப்பால் ஏற்படவில்லை. ஆனால் இன்று பழி இவ்விரண்டின் மேலுமே விழுகிறது. இலகுவில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் மீது பழியைப் போட்டு காலநிலைக் குற்றவாளிகளாக மூன்றாமுலக நாடுகளைச் சித்தரிக்கும் போக்கு தொடர்கிறது. எப்போதும் “மற்றவர்” மீது குற்றம் சாட்டப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. உண்மைகளைத் தேடிப் பார்க்கவோ பொறுப்பை ஏற்பதையோ விட யாரையாவது குறை சொல்லுவது இலகுவானது. அதையே மேற்குலக நாடுகள் செய்கின்றன. இந்தக் கதையாடலை அங்குள்ள பெரும்பாலான மக்கள் ஏற்கிறார்கள்.

வளர்ந்த நாடுகளில் வசதியாகவும், மனநிறைவு கொண்டவர்களாகவும் இருப்பவர்களே, குழப்பத்தை ஏற்படுத்தி, தொடர்ந்தும் சுவட்டு எரிபொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களிடம் ஊறிப்போன ஆழ்ந்த சுயநலமும் உலகத்தைப் பற்றிய ஒரு சுருங்கிய பார்வையும், அவர்களின் நடத்தையை மாற்ற தடையாயுள்ளது. அவர்கள் எதையும் விட்டுவிட மறுக்கிறார்கள். மாமிசப் பொருட்களை சாப்பிடுவதை நிறுத்தவும், விமான பயணத்தை குறைக்கவும், தேவையில்லாத பொருட்களை வாங்குவதை நிறுத்தவும், சுவட்டு எரிபொருள் வாகனங்களை ஓட்டுவதை நிறுத்தவும், பொறுப்புடன் பொருட்களை வாங்கவும், தேவையற்ற பொருட்களை வாங்குவதை நிறுத்தவும் அவர்கள் தயாராக இல்லை. சங்கடமான நடவடிக்கைகளை எடுக்கவும் தேவையான சலிப்பான மாற்றங்களைச் செய்யவும் “அவர்கள்” தங்களுக்கு நெருக்கடி ஏற்படும்வரைத் தயாராக இல்லை.

இதற்கான காரணத்தை ஆழ்ந்து யோசித்தால், இது தற்செயலாக நடந்ததல்ல என்பது புலப்படும். சுரண்டல் மற்றும் பிரிவினையின் அநீதியான சமூக-பொருளாதார அமைப்பை வலுப்படுத்த இது வேண்டுமென்றே வளர்க்கப்பட்டது. முழுச் சமூகங்களும் சுயநலம், பேராசை மற்றும் இன்பம் ஆகியவற்றில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. பிறப்பிலிருந்தே போட்டித்தன்மையுடனும் லட்சியத்துடனும் இருப்பதற்கும், மற்றவர்களுக்கும் சமூகத்திற்கும், இயற்கை உலகத்திற்கு ஏற்படும் சேதத்தைப் பொருட்படுத்தாமல், அவர்கள் விரும்பியதைப் பெறுவதற்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றும் கற்பிக்கப்பட்டது. பொருள்நாட்டமும் நுகர்வும் ஒரே துருப்பிடித்த நாணயத்தின் இரு பக்கங்கள். இவையே இந்த இழிந்த அசிங்கமான உலகப் பார்வையின் கருத்தியல் கட்டமைப்பை உருவாக்குகின்றன. இது உலகமயமாக்கல் மூலம் வெகுதூரம் பரவி, ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள ஒவ்வொரு தேசத்தையும் மாசுபடுத்தும் ஒரு பார்வையை மக்கள்மயப்படுத்தியுள்ளது. அதே வெற்று மதிப்புகளைக் கொண்ட இழிந்த கண்ணோட்டத்தை ஊக்குவித்த செயல் கடந்த அரைநூற்றாண்டு காலத்தில், உலகெங்கும் இயற்கையையும் பசுமையையும் அழித்தது மட்டுமன்றி ஆரோக்கியமற்ற சமத்துவமற்ற சமூகங்களை உருவாக்கியுள்ளது.

நீங்கள் என்னோடு முரண்படலாம். அதற்கு முன்னர், இம்முறை நத்தாருக்கு நீங்கள் வழங்கிய, பெற்ற பரிசுப்பொருட்கள் எத்தனை? அத்தனையும் அவசியமானவையா, பயனுள்ளவையா,
முழுமை யாகப் பயன்படுத்தப் படக்கூடியவையா” என்று சிந்தியுங்கள். உங்கள் வீட்டில் உள்ள பொருட்களில் பயன்படுத்தப்படாத பொருட்கள் எத்தனை உண்டு என்பதைக் கணக்கிடுங்கள். இன்னும் ஆழமாய் நோக்கின், கடந்துபோன ஆண்டில் நீங்கள் வாங்கி இதுவரைப் பயன்படுத்தாத பொருட்கள் எத்தனை என்பதை நினைத்துப் பாருங்கள். இப்போது சொல்லுங்கள், நீங்கள் காலநிலைக் குற்றவாளியா?□




Dr.விமலநாதன் MD PhD
(Senior Consultant Cardiologist,
Oslo, Norway)



*கடந்த 4 மாதங்களாக எனக்கு அடிக்கடி காய்ச்சல் வருகிறது. paracet போன்ற குளிசைகள் எடுத்தாலும் விட்டு விட்டு காச்சல் வருகிறது. என்ன செய்வது?*

*காய்ச்சல் ஒரு நோய்க்குரிய அறிகுறியாகும். காய்ச்சலுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து அந்த நோய்க்குரிய சிகிச்சையளிப்பதே வைத்தியர்களின் முன்னுள்ள சவாலாகும். காரணம் காய்ச்சல் பல்வேறுபட்ட நோய்களுக்கு அறிகுறியாக இருக்கலாம்.*

1. *வைரசு, பக்றீரியா, பங்கசு, ஒட்டுண்ணிகள் போன்ற கிருமிகளால் தொற்று ஏற்படுகின்ற போது உடலின் எதிர்ப்புச்சக்தியின் ஒரு விளைவாக காய்ச்சல் ஏற்படுகின்றது.*
2. *மருந்துகளின் பக்கவிளைவாகவும் காய்ச்சல் ஏற்படலாம்.*
3. *ஒவ்வாமை காரணமாகவும் காய்ச்சல் ஏற்படலாம்.*
4. *(Autoimmun) உடல் எதிர்ப்புசக்தியின் அசாதாரண செயற்பாட்டினாலும் காய்ச்சல் ஏற்படலாம்.*
5. *புற்றுநோய்க்கும் காய்ச்சல் ஏற்படலாம்.*

*காய்ச்சலுக்கான அறிகுறிகள் என்ன?*

*காய்ச்சலே நோய்க்குரிய அறிகுறிதான். சாதாரண உடல்வெப்பநிலை 37,4 பாகை இது 38 பாகையிலும் கூடுதலாக இருக்கும் போது காய்ச்சல் என வரையறுக்கப்படுகின்றது. காய்ச்சல் இருக்கும்போது உடல் அலுப்பாகவும், சோர்வாகவும் இருக்கும். காய்ச்சல் கூடும்போது வலிப்பு ஏற்படுவதற்கான சாத்தியமும் உண்டு. காய்ச்சலுடன் தலைவலி, வயிற்றோட்டம், சத்தி போன்றவையும் இருக்கக்கூடும். உடல்வெப்பநிலை கூடுவதால் உடலிலிருந்து அதிக நீரிழப்பும் அதனால் பாரதூரமான விளைவுகளும் ஏற்படும்.*

*அடிக்கடி காய்ச்சல் வருவதற்கான காரணங்கள் என்ன?*

*பொதுவாக காய்ச்சல் வரும்போது குடும்பவைத்தியரிடம் சென்று ஒரு சில பரிசோதனைகளுடன் தீர்வைக் காணக்கூடியதாக இருக்கும்.*
*ஆனால் உங்களைப் பொறுத்தளவில் அவ்வாறு கண்டுபிடிப்பது கடினமென எண்ணத் தோன்றுகிறது. எனவே குடும்பவைத்தியருடன் கலந்தாலோசித்து வைத்தியசாலையில் ஒரு தொற்றுநோய் நிபுணரிடம் சென்று மேலதிக பரிசோதனைகள் செய்வதே சிறந்தது.*

*சிலவேளைகளில் எல்லாவகை பரிசோதனைகள் செய்த பின்பும் காரணம் எதையும் கண்டுபிடிக்காமல் இருக்கக்கூடும் ஆயினும் பாரதூரமான காரணங்கள் எதுவுமில்லை என்பது உறுதியாவதே நிம்மதிதான்.*

# தாவீதுத்திறவு



-தமயந்தி.

தொடர்- பாகம் 6

**அண்ணாவியார் வீட்டுப் பனைமட்டை வேலியில் இப்போ அந்த தாவீது ஓணான் ஒரு பக்கமாகவும், இரண்டு கோலியாத்து ஓணான்கள் எதிர்ப் பக்கமாகவும், போர்நிலை எடுத்து நின்றன.**

*2018. ஒக்டோபர் 2ஆம் திகதி, இரவு 7மணி. தலைமன்னார். சத்தியநாதனோடு பஸ்ஸை விட்டிறங்க, எம்மைக் காத்துக்கொண்டு நின்றார்கள் உதயசூரியும், தேவபாலனும். அன்றிரவு தேவபாலன் வீட்டில், வழமையாக நண்பர்கள் இப்படிச் சந்தித்துக் கொண்டால் எப்படி நிகழ்ந்தேறுமோ அப்படியே தீர்த்தப்பாமாலையாக உறைப்பும் உவப்புமான ஆழிப்புஷ்பங்களோடு சிறப்பாக நிகழ்ந்தேறலாயிற்று. மறுநாள் காலையில் தேவபாலன் வீட்டார் படைத்தருளிய குரக்கன் புட்டும், நண்டுக்குழம்பும், கட்டாக்கருவாட்டுப் பொரியலுமாகக் களமாடிவிட்டு நால்வரும் பேசாலைக்குப் பயணமானோம்.*

*அண்ணாவிமார் ஜெகநாதன் குரூஸ், அம்புரோஸ் குலாஸ் என்று இன்னும் சில கலைஞர்களைச் சந்தித்து அம்பாப் பாட்டும் கூத்துமாகப் பதிவு செய்து கொண்டோம். அன்றைய தினம் பேசாலையின் கரையோரத்து மென் காற்றுடன் இதமான இசையாகக் கரைந்து, கலந்து போயிற்று.*

*வங்காலை, சிலாவத்துறை, முத்தரிப்புத்துறை என தேடுதல்ப் பயணங்களை மூன்று தினங்களுக்குள் முடித்துக் கொண்டு ஒக்டோபர் 5ஆம் திகதி மதியம் மீண்டும் தலைமன்னார் தேவபாலன் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். நானாட்டான் கைக்குத்தரிசிச்சோறும், நண்டுக்கறியும், நகரைமீன் சொதியும், கயல்பொக்கணிப் பொரியலுமாக அந்த மதியம் எம்மைச் சிறைப் படுத்திக் கொண்டது. சாப்பிட்டு முடிந்ததும் சத்தியநாதனையும் அழைத்துக்கொண்டு தலைமன்னார் கரையோரக் காட்சிகளைப் படங்கள் எடுப்பதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போதுதான் மருசலிடமிருந்து அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது. அண்ணாவி தாவீதுத்திறவார் இறந்துவிட்டார் என்ற துன்பச்செய்தி அது. பட்டப்பகலாய், வெட்டவெளியாய் விரிந்துகிடந்த தலைமன்னார் மேற்குக் கடற்பரப்பின்மேலாய் எங்கிருந்துதான் அந்தக் கருமுகல்கள் திரண்டனவோ...... பொலபொலவென்று அடித்துச் சொரிந்தது வானம். நெருப்புக்கொள்ளிகொண்டு சுட்டாற்போல் கொண்டல் பதைபதைத்து அங்குமிங்கும் ஓடி மரங்களை உலுப்பியது. குய்யோ முறையோவென அலைக்கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி தலைமன்னார்க் கடல் கொந்தளித்துக் குமுறியது. தீவகத்திலொரு மூத்த கூத்தன் செத்துப்போனதற்கு மன்னார் வளைகுடாவே துக்கித்துக் குளறி ஒப்பாரி வைத்ததெனவாகக் கண்டுகொண்டேன்.*

*2018. ஒக்டோபர் 6ஆம் திகதி, காலை 7மணி. பூதத்தம்பி கோட்டை, 2ம் ஒழுங்கை. ஒரே சனக்கூட்டம். இன்னும் இன்னும் வந்துகொண்டே இருந்தார்கள். பெரும்பாலானோர் 60, 70 வயதுகளைத்*

தாண்டிய பெண்களும் ஆண்களுமாகக் காணப்பட்டார்கள். அயற்கிராமங்களில், அயலூர்களில் இருந்து மட்டுமல்ல, எங்கெங்கோ தூரத்துப் பிராந்தியங்களில் இருந்தெல்லாம் வந்து கொண்டிருப்பதாக அங்கு அறிய முடிந்தது.


வீட்டுக் கூடத்தில் அண்ணாவியாரின் உடல் மலர்கள் சூழ்ந்த வெண்பட்டுப் படுக்கையில் கிடத்தப் பட்டிருந்தது. அந்த முகத்தில் இப்போ சாந்தம் படர்ந்திருந்தது என்று என்னால் சொல்ல நிச்சயம் முடியாது. ஏனெனில் அது தென்படவில்லை. அவரது முகத்தையே பார்த்துக்கொண்டிந்த நான் இமைகளை வெட்டித் திறக்கும் ஒவ்வொரு தடவையும் அண்ணாவியாரின் முகத்தில் வெவ்வேறு ரசங்களை உணரலானேன். மூடப்பட்டிருக்கும் அவரது விழிகளுக்குள் ஏதோ அசைவதாகவும் உணர்ந்தேன்.

அந்த ஒன்பதாவது ரசம் சாந்தம் எனச் சொல்லிக் கொண்டிருப்போர்மீது சந்தேகம் இன்னும் வலுக்கத் தொடங்கியது? தாவீதுத்திறவு அண்ணாவியாரின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு கூடத்தை விட்டு வெளியே வந்தேன். சனங்கள், சனங்கள்...... சோகத்தை முகங்களில் அப்பிய சனங்கள் வந்துகொண்டேயிருந்தார்கள்.

அண்ணாவியார் வீட்டுப் பனைமட்டை வேலியில் இப்போ ஏழெட்டுத் தாவீது ஓணான்கள் அங்குமிங்குமாக நடந்து திரிந்தன.

"சாந்தம் என்றிருப்போராலும்
சடுதிநிலை ஆனோராலும்
சனசமூகம் தான் துலங்க
ஆகுதலேதும் இல்லையடி
அன்னமே என் சலோமை
உண்மையிதை நீ அறிவாய் 
என்ற பாடலை செத்துப்போன தாவீதுத்திறவு அண்ணாவியாரின் முகத்தில் வாசித்தவனாக சத்தியமாக உணர்ந்து கொண்டேன்.

நிறைவு!



இந்த ஆறு தொடர்களையும் இம்மாதம் (08.12.2022) மரணித்த அண்ணாவியார் ஜெயராஜா சவிரிமுத்து அவர்களுக்கு அஞ்சலித்து சம்ர்ப்பிக்கிறேன்.
இந்தத் தொடர் தேன் தமிழிதழில் பிரசுரிக்கப் படும்போதெல்லாம், "அடுத்த பகுதி எழுதி முடிச்சிருப்பாய்தானே அனுப்பிவிடு, நான் ஒருத்தருக்கும் சொல்லமாட்டன்" என்று. அச்சுப்பிரதியின் வாசிப்பு சுவாரஸ்யம் கருதி அனுப்ப மறுத்தே வந்திருக்கிறேன்.
இந்த இறுதிப் பகுதியைக்கூட தான் வாசிப்பதற்கு அனுப்பும்படி (03.12.2022 மதியம் 14.15) கேட்டிருந்தார்.
"நத்தாலுக்குள் பேப்பர் வந்திரும்தானே இப்ப என்ன அவசரம்?" என்று மறுத்து விட்டேன். அப்போதே இதனை அவருக்கு அனுப்பியிருக்கலாமே என்று இப்போ நினைக்க வேதனையாக இருக்கிறது.

எனது சிறிய அறையிலிருந்து இறுதிப்பகுதியை
உரத்து வாசிக்கிறேன் அண்ணா
உனது செவிகளை எட்டும் என்ற அற்ப நினைப்பில்.

# முகமட்'இன் மூன்று குறிப்புகள்

MOHAMED ALI YASEER ARAFATH

## குறிப்பு:1



இலங்கையில் 550,000 மெட்ரிக் தொன் மரக்கறி, மற்றும் பழவகைகள் வருடாந்தம் விரையமாகிறது. இதற்கான பிரதான காரணம், உற்பத்தி விநியோகம் வலையமைப்பு சார்ந்த குறைபாடுகள்.

இதன் மொத்த வணிகப் பெறுமதி 65 - 70 பில்லியன் இலங்கை ரூபாய்களாகும். இதன் முழுச் சுமையும் விவசாயிகள் மேலேதான் ஏற்றப்படுகிறது. நவீன உலகில் இவற்றைச் சிறப்பாக கையாள்வதற்கு எத்தனையோ வகையான நேரடி தொழில்நுட்பங்கள், வணிகமாதிரிகள் உள்ளன.
தகவற் தொழில்நுட்பம் மூலம் ஒரு சில மாதங்களுக்குள் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணலாம். ஆனால் எதுவுமே செய்யாமல் நாம் இருக்கிறோம். தம்புள்ளையில் ஒரு cold storage system கடந்த ஏழு வருடங்களாக கட்டிக்கொண்டு இருக்கிறோம்.
நானுஓய அம்பேவல பகுதியில் இருக்கும் low temperature advantageI பயன்படுத்தி energy efficient முறை மூலம் cold storage மற்றும் தனியான Reefer container Railway மூலம் இலங்கையின் மரக்கறி சந்தையில் நீண்ட கால market stability கொண்டு வரலாம் என ஆலோசனை தெரிவித்து advocacy செய்து வந்தேன். இதன் மூலம் நிச்சயமாக அனைத்து மரக்கறியின் விலையையும் ஆண்டு முழுவதும் கிலோவுக்கு 100 ரூபாயை விட குறைவாக பேணலாம்.
இதனால் National Nutrition Profile சிறப்பாக இருக்கும். அதை செயல்படுத்த தான் யாருக்கும் மனமில்லை.

## குறிப்பு:2



இந்திய சனத்தொகை 140 கோடி. இலங்கை சனத்தொகை 2.2 கோடி. ஆனால் இலங்கையில் 1600 கிலோமீட்டர் நீளமுள்ள coastline உண்டு. அதேவேளை இந்தியாவின் மொத்த மெயின்லாண்ட் coastline 5500 கிலோமீட்டர்தான். அதாவது தலா மனித கடல் வளம் இந்தியாவை விடவும் இலங்கையில் 150 மடங்கு அதிகம். This is astronomical significance. இலங்கையில் இவ்வளவு கடல் வளத்தை வைத்துக்கொண்டு எதற்காகத்தான் கடன்பிச்சை கேட்டு நாடுநாடாக நாம் அலைய வேண்டும்.
இந்தியாவுக்கு கடலுணவை ஏற்றுமதி செய்தால் கூட நாம் பிழைத்து விட முடியும். உலகின் கடல்வளங்களை முறையாக பொருளாதார வளமாக மாற்றும் நம்பர்வன் தேசம் நோர்வே. அதற்கடுத்ததான இடத்தில் ஜப்பான்.

பொருளாதார வளமாக மாற்றும் நம்பர்வன் தேசம் நோர்வே. அதற்கடுத்த இடத்தில் ஜப்பான். முறையாகப் பார்த்தால் இவ்விரண்டு நாடுகளுக்கும் அருகில் இலங்கையின் கடற்றொழிற் பொருளாதாரம் இருந்திருக்க வேண்டிய அத்தனை அனுகூலங்களும் இருக்கின்றன என்ற உண்மையை சுலபமாகவே அறிவோம்.
ஆனால் இங்கே என்ன செய்கிறோம்...?
தென் அமெரிக்காவின் சிலியில் இருந்து டின்மீன் இறக்குமதி செய்கிறோம். எமக்கு வாய்த்த அரசியல்க்கோணங்கிகள் அப்படி. இவர்கள் சிலியில் இருந்து மிளகாய் இறக்கினாற்கூட மனம் கொஞ்சம் ஏற்றுக்கொள்ளும். இவ்வளவு விரிந்த கடற்பரப்பையும், வளங்களையும் சூழவும் வைத்துக்கொண்டு டின்மீனை இறக்குகிறார்களென்றால் இவர்களை என்னவென்பது?

*குறிப்பு:3*




*உலகில் மிகவும் சிக்கலான தேச எல்லைப் பிரிகோடு இந்தியா- பங்களாதேஷ் இடையிலான எல்லையில் தான் இருந்தது.*
*இந்தியாவின் எல்லைக்குள் பங்களாதேஷ் பங்களாதேஷுக்குள் இந்தியா என, நாட்டுக்குள் நாடு பகுதிகள். இதை* Pasha Enclaves *என்று அழைத்தனர். மேற்குவங்க அசாம், திரிபுரா, மேகாலயா ஆகிய இந்திய மாநிலங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இந்த* Enclaves *அமைந்திருந்தன பங்களாதேஷ் 102 இந்திய பகுதிகளையும் இந்தியா 71 பங்களாதேஷ் பகுதிகளையும் கொண்டிருந்தன. பங்களாதேஷ் உள்ள 21 இந்திய பகுதிகளுக்கு உள்ளே பங்களாதேஷ் நிலப்பகுதி இருந்தது. அதே வேளை,* Dahala Khagrabari *எனப்படும் பகுதி பங்களாதேஷ் - இந்தியா - பங்களாதேஷ் - இந்தியா என்று மூன்று அடுக்குகளாக அமைந்திருந்தது.*

Only Third Degree Enclave in world. *இந்த சிக்கலான எல்லைகள் உருவான வரலாறு சுவாரஸ்யமானது. பீஹார் ராஜாக்கள் மற்றும் ரங்பூர் மஹாராஜாக்களுக்கும் இடையில் காலாகாலமாக நடந்த சதுரங்க விளையாட்டில் அவர்கள் வெற்றி தோல்விக்கு ஏற்ப தங்கள் எல்லைப் பகுதி நிலங்களை வைத்து விளையாட்டு விளையாடியதில் இவ்வாறு எல்லையின் இரண்டு பகுதிகளிலும் நிலங்களும் மனிதர்களும் கூறு போடப்பட்டு, அதுவே நிலை பெற்றது. 1948 இந்தியா பிரிவினைக்கு உள்ளான போது கொச்பீஹார் ராஜா இந்தியாவுடனும் ரங்பூர் மஹாராஜா கிழக்கு பாகிஸ்தானுடனும் சேர இந்த சிக்கலான நிலப்பரப்பு இருந்தவாறே பகிரப்பட்டது. 1971 இல் பங்களாதேஷ் சுதந்திரம் பெற்ற போதும் அவ்வாறே இருந்து. பின்னர் 2015 இல் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த எல்லைப் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வந்தார். இதற்காக இந்திய அரசியலமைப்பின் நூறாவது திருத்தத்தை கொண்டு வந்தார்.*
*இதன் மூலம் இந்தியாவின் பத்தாயிரம் ஏக்கர் நிலம் பங்களாதேஷுக்குத் தாரை வார்த்து இந்திய எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டார். இதன் போது இந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் விரும்பும் குடியுரிமை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. அதிலே 35000 பேர் பங்களாதேஷ் பிரஜாவுரிமை கோரினர். 15000 பேர் இந்தியாவில் குடியுரிமை பெற்றனர். சதுரங்க ஆட்டத்தில் ஆரம்பித்து அரசியல் சதுரங்க ஆட்டத்தில் நிறைவு பெற்றது இந்த எல்லை பிரிகோடு விவகாரம்.*

# இலங்கையில் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வியல்



பிரியமதா பயஸ்

## மனங்களை உலுக்கிய பட்டினி சாவு - கிழக்கில் நடந்த பரிதாபம்

தந்தையை இழந்து தாயுடன் வாழ்ந்த சிறுவன் ஒருவன் பட்டினியால் பரிதாபமாக மரணம் அடைந்துள்ளமை இலங்கையில் தமிழர் பகுதியில் நடந்தேறி இருப்பது மிகுந்த துயரைத் தருகிறது. பெண்தலைமை குடும்பமாக இருக்கும் இந்த குடும்ப சூழல் மிகுந்த வறுமை நிலையை காட்டி நிற்கிறது.

நேரத்துக்கு சாப்பிட முடியாவிட்டாலும் ஒருநாளுக்கு ஒருதடவையாவது உணவுண்டு உறங்கமுடியாத சூழலில் பெண் தலைமைக் குடும்பங்கள் வாழ்வது எவ்வளவு பரிதாபமானது?

வறுமை காரணமாக பட்டினியில் வாடிய சிறுவன் போஷாக்கு இன்மையால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என்ற செய்தி சிறுவனின் உயிரிழப்பின் பின்னர் காவித்திரியப்படுகிறது எவ்வளவு அவமானமான செயலாகி போனது. நேர்த்தி இல்லாத வீடு, சுற்றிவர மழை வெள்ளம், உண்ண உணவில்லாத நிலை என்பன எவ்வளவு துயரமான நிலைமை.

இப்படி இலங்கையில் பல ஆயிரம் குடும்பங்கள் இன்றும் வாழ்வதுதான் இலங்கை மக்களின் சொல்லொணாத் துயர். வடக்கு கிழக்கு பகுதி-களைத் தவிர இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த நிலைமை தீவிரமாக இருப்பது யாரும் கண்டு கொள்ளாத துயரநிலை.

கிழக்கிலங்கையின் மூதூர் - 64ஆம் கட்டை சகாயபுரம் என்ற கிராமத்தில் உள்ள மாணிக்க விநாயகர் ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியில் குடியிருக்கும் வைரமுத்து ராமராஜன் என்ற சிறுவனே இவ்வாறு பட்டினியின் கொடுமையால் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் தந்தையை இழந்து தாயுடன் வாழ்ந்து வந்துள்ளார். இது தொடர்பான தகவல்களை மூதூர், பாரதிபுரம் - கிளிவெட்டியில் உள்ள மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் சமூக ஊடகங்கள் ஊடாக வெளியிட்டுள்ளனர்.

பெரும்பாலும் பெண் தலைமைக் குடும்பங்களில் இருக்கும் குழந்தைகளின் ஊட்டசத்து மற்றும் போதிய உணவு என்பனவற்றையாவது இந்த அரசும், சமூக ஆர்வலர்களும் கவனிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஒரு பெண் தலைமைக் குடும்பத் தலைவியாக நான் இந்த கட்டுரை மூலம் கோரிக்கை முன் வைக்கின்றேன். நிம்மதியான உறக்கம், பட்டினியில்லாத வயிற்றுடன் உறங்கப்போகும் ஒரு மனிதனுக்குத்தான் கிடைக்கும். அதை சக மனிதர்கள் தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும்.
எத்தனை பொருளாதார நெருக்கடி இலங்கையில் இருந்தாலும், எங்கோ ஒரு இடத்தில் உணவு விரயம் என்பது ஒவ்வொரு நிமிடமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது,



ஆகையால் இப்படி அநாதரவாக இருக்கும் பெண்தலைமை குடும்பங்களுக்கு கைகொடுத்து உதவுங்கள். அவர்களின் வாழ்க்கையில் ஒரு சிறு ஒளிக்கீற்றையாவது உங்கள் நம்பிக்கையான வார்த்தைகளால் முளைவிட செய்யுங்கள். எதுவுமற்ற அநாதரவான நிலைமையை கணவனை இழந்த ஒவ்வொருபெண்ணும் அனுபவிப்பாள். அவளுடன் வாழும் குழந்தைகளுக்காக தன்னை அர்ப்பணித்து மனது உடைந்து வேண்டா வெறுப்பான நிலைமைக்கு சென்றுவிடுவாள். இதன் மூலம்கூட பிள்ளைகள் கவனிப்பாரற்ற நிலைக்கு செல்வது வழமையான உளவியல்தான். எனவே பெண்தலைமை குடும்பங்களின் உளவியலையும் வாழ்வியலையும் கவனிக்க தவறாதீர்கள். .

தனியே ஒரு பெண்ணாக தன் குடும்பபாரத்தை சுமக்கும் பெண்ணுக்கு எப்போதும் ஆதரவாக இருங்கள். தனியே இருக்கிறாள் என்ற காரணத்துக்காக வசை மாரி பொழியாதீர்கள், அவள் ஒழுக்கத்தின் மீது கல் ஏறியாதீர்கள், இப்படியான சமூக அடக்குமுறைகளுக்கு பயந்துவாழும் பெண்களின் குடும்பங்களில்தான் இப்படியான இழப்புக்கள் தீவிரமாக இருக்கிறது. நான் வெளியே போய் ஒரு வேலைதேடி சென்றால் இந்த சமூகம் என்னை தப்பாக பார்க்குமா என்ற பயத்திலேயே பல பெண்கள் தங்கள் வாழ்க்கையை தொலைத்து விடுகிறார்கள். இனியும் இப்படியான இறப்புக்கள், இழப்புக்கள் பெண்தலைமை குடும்பங்களுக்கு வேண்டாம்.

அவர்களையும் வாழ அனுமதியுங்கள், வாழ்க்கை கொடுங்கள், வசை பாடாதீர்கள், வழியமைத்து வழிகாட்டுங்கள்.
இப்படி அநியாயமான இறப்புக்கள் எவ்வளவு கொடுமையானது தெரியுமா?



கிழக்கில் இறந்த அந்த “சிறுவனின் தற்காலிக வீட்டில் உள்ளேயும் வெளியேயும் மழை வெள்ள நீர் தேங்கி நின்றது. அவனது வீட்டுக்குள் ஒரு பொருள் இல்லை, உணவு என்று சொல்ல எந்த பண்டமும் அங்கே இல்லை. மிக பரிதாபகரமான வாழ்க்கையை இறக்கும்வரை அந்த சிறுவன் வாழ்ந்திருக்கிறான் என்பதை இறந்த பின்னர் அறிந்து என்ன பயன்? இனிமேலாவது பட்டினியில் இருக்கின்ற சிறுவர்களைப் பாதுகாக்க அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும்.

சகாயபுரம் கிராமம் போன்று இலங்கையில் பல கிராமங்களில் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி பெருமளவு பெண்தலைமை குடும்பங்கள் கவனிப்பாரற்று உள்ளனர். அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்” என்பதே அனைவரின் வேண்டுகோளும்..

# அம்மாவின் கடுமையும், அரும்பான காதல்களும்

–ஜீவன் –



கல்லூரி காலத்தில் மேடை மற்றும் வீதி நாடகங்களில் வீட்டுக்கு தெரியாமல் நடிக்கத் தொடங்கினேன். அதற்கு காரணம் பாடசாலை நாடகங்களில் நடிக்க வைத்த ஆசிரியர்கள்தான். முதலில் பெண் வேடங்களில் சிரிக்க வைக்கும் பாத்திரங்களே கிடைத்தன.
குடும்பம் வேறு இடத்திலும் நான் வேறு இடத்திலும் இருந்து படித்தது அதிகம். அதனால் சிங்கள நாடக நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களோடு நாடகப் பயிற்சியோடு அரங்கேற்றும் நாடகங்களிலும் நடிக்கத் தொடங்கினேன். அது பல வருடங்கள் வரை வீட்டுக்கு தெரியாது.

எனது நாடகத்தில் நடித்த புகைப்படங்கள் சிங்கள பத்திரிகைகளில் வந்தாலும் வீட்டுக்கு ஆரம்பத்தில் தெரிய வருவதில்லை. காரணம் யாரும் சிங்கள பத்திரிகைகள் வாங்குவதோ அல்லது படிப்பதோ இல்லை. நாடக செய்திகளை யார் பார்ப்பார்கள். அது ஏதோ ஒரு மூலையில் வரும் பத்திரகையில் போட்டவரே சொன்னால்தான் எங்களுக்கே தெரியும். இப்படி நாடகங்கள் நடித்து விட்டு மேடையை விட்டு வெளியேறும் போது பலர் வந்து பேசுவார்கள். முகவரி கேட்பார்கள். அக் காலத்தில் போன் வசதியும் இல்லை. வேறு வழிகளும் இல்லை. அப்படி பேசிவிட்டு முகவரி வாங்கும் நங்கைகளும் இருப்பார்கள். அவர்களில் எங்களுக்கு யாரையும் பிடித்திருந்தால் முகவரியை கேட்டு வாங்குவோம்.
எனது முகவரி கொடுக்க 2 இடங்கள்தான் உண்டு. ஒன்று நான் இருக்கும் இடம் அந்த முகவரி கொடுக்க முடியாது. அவர்களுக்கு சிங்களம் தெரியும். அவர்களோடு இருப்பதால் வரும் கடிதங்களை உடைத்து வீட்டுக்கு சொல்லிவிடுவார்கள். அந்த பயம் மிக மோசமானது.

வீட்டு முகவரியை கொடுத்தால் வீட்டில் பெரிதாக பார்க்க மாட்டார்கள். திறந்தாலும் சிங்களத்தில் இருந்தால் வாசிக்க மாட்டார்கள். அப்பா பொதுவாகவே அடுத்தவர் விடயங்களை நோண்டவே மாட்டார். அம்மா கடுமைதான். ஆரம்பத்தில் நண்பர்களிடம் இருந்து வந்த கடிதங்களை பார்த்ததில்லை.
அக்காலத்தில் பென்பால் (Pen Pal) Pen Friend அதாவது பேனா நண்பர்கள் என பத்திரிகையில் வரும் சிலரை தேர்ந்தெடுத்து கடிதம் எழுதுவது எனது பொழுது போக்கு. அதேபோல எனது விபரங்கள் பேனா நண்பர்கள் பகுதியில் வந்தால் எனக்கும் கடிதங்கள் வரும். அதை வீட்டில் பெரிதுபடுத்தியதில்லை. கடிதம் எழுதும் பழக்கம் நல்லது என விட்டு விட்டார்கள். அத்தோடு வீட்டுக்கு கடிதம் கொண்டு வரும் பியன் சுப்பையா மாமாவுக்கும் சிங்களம் தெரியாது. சுப்பையா அவர்களை சுப்பையா மாமா எனத்தான் அழைப்பேன். வார இறுதியில் நான் வீட்டுக்கு போகும் போது கடிதங்கள் மேசையில் இருக்கும்.
பிற்காலத்தில் பெண் சிநேகிதிகளது கடிதங்கள் வரத் தொடங்கியதும் அம்மா அலெட் ஆனார். அவர் உடைத்து வேறு ஆட்களை வைத்து வாசிக்கவும் தொடங்கியதோடு , அந்த கடிதங்களை என் கைக்கு கிடைக்காமல் மறைத்தும் விட்டார். ஆரம்பத்தில் அவை தெரியாது. பின்னர் உடைத்து வாசிக்கப்பட்ட கடிதங்கள் மேசையில் இருந்ததும் சந்தேகம் வரத் தொடங்கியது. அதை கேட்கப் போனதும் எனது தண்டவாளங்கள் எல்லாம் வண்டவாளங்கள் ஆகியது. பொடியன் போற போக்கு சரியில்லை என அவதானிக்கத் தொடங்கினார். ஆனாலும் நண்பர்கள் சேர்ந்து திட்டம் போட்டு காய் நகர்த்த தொடங்கினோம்.

ஆண் நண்பர்களது கடிதங்களால் பிரச்சனை இல்லை. நண்பிகளால் வந்த பலரது கடிதங்களால் ஏகப்பட்ட பிரச்சனை. அதில் அநேகரை அன்றும் கண்டதில்லை. இன்றுவரையும் கண்டதில்லை. அவர்களது கடிதத்துக்குள் வைத்து அனுப்பும் புகைப்படங்களாலேயே அதிக பிரச்சனை. சிலர் கவிதை எழுதியிருப்பார்கள். அது சில வேளை சினிமா பாடல் வரியாகக் கூட இருக்கும். அதை ஒப்புவிக்க கூகிள் கடவுள் அக் காலத்தில் இல்லை. அது ஒரு பாட்டு அம்மா என்று சொல்லி ஒப்புவிக்க டேப் ரெக்கார்டும் இல்லை. இணையமும் இல்லை.
அன்று வானொலியில் பாட்டு போகும்போது சொன்னால்தான் நம்புவார்கள். அந்த பாட்டு போகும்போது நாம் அங்கு இருக்க வேண்டும் அல்லது அந்த நேரத்தில் ரேடியோ கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இதெல்லாம் நடக்கவே நடக்காது. தலையை பிச்சுக் கொள்ளத் தோன்றும் ஆசையும் விடாது. பிரச்சனையும் முடியாது.
காலடி மண்ணைக் கூட காணாமல் காதலிப்பதாக கதை தொடரும்.....□

# தேடுகிறேன் மனிதத்தை...

-சகிலா யூலியஸ்-



தொலைந்துபோன மனிதத்தில் புனிதத்தை தேடுகிறேன்
மனிதமே தொலைந்த நிலையில் புனிதம் எங்கே
மனிதத்தை வெளிப்படுத்த மனிதனாய் வந்தாயோ
புனிதத்தை கண்டுணர வாழ்வையே தந்தாயோ

கண்ணெட்டும் தூரமெல்லாம் துன்புறும் மனிதத்தின்
துன்பத்தை போக்க நீ துரிதமாய் வருவாயோ
கண்கள் பனிக்கின்றன காட்சிகளால் மனம் நொந்து
கண்ணீர் துடைத்திடவே கருணையனே வருவாயோ

பசிவரவழிதேடும் புலம்பெயர் இனம் இங்கே
பட்டினிச் சாவை தினம் நோக்கும் எம்மினம் அங்கே
பகுத்தறிய வைப்பாயோ உதவும் மனம் தருவாயோ
கரம் நீட்டி பசி போக்கி கண்ணீரைத் துடைப்பாயோ

ஒடுக்கப்பட்ட இடையர்களோ நாம் இங்கே
நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொள் பரிசேயரோ நாம் இங்கே
யாருக்காக நீ வருவாய் யாரை நீ தூக்கிடுவாய்
விடையளிக்க வாருமையா, வித்தகனே விரையுமையா

பணத்திற்காக பிணி பரப்பி, மகிழும் உலகம் இது
பிணி தொடர உருக்குலையும் உலகும் இது
மனிதத்தை நிலைக்க செய்ய மருந்தாகி வருவாயோ
பிஞ்சுக் கரம் நீட்டி பிணி தீர வைப்பாயோ

தேடிய மனிதத்தை காண்பேனே உன் வரவில்
புனிதத்தை கண்டுணர்ந்து புது உலகம் படைப்பேனே
அகக்கண்கள் திறந்து துன்புறும் மனிதத்தை உணர்வேனே
உன்னை மற்றவரில் கண்டு ஊழியனாய் பயணிப்பேனே




அன்பென்னும் பண்பினால்
அருளென்னும் ஊற்றினால்
அகிலத்தை நிரப்பிட
அவனியில் வந்துதித்தார்

பாவமது களைந்து
பாசமதை வளர்த்திட
பார்போற்றும் விண்வேந்தன்
பாரினிலே அவதரித்தார்

ஏழ்மையின் வடிவிலே
ஏழைகள் உள்ளத்திலே
வைக்கோலின் நடுவினிலே
வையகம் போற்ற ஒளியானார்

மண்ணில் தவழ்ந்த விண்ணவனே
மனதில் மகிழ்ச்சியை தந்தவனே
மகிழ்வோடு அவர் பிறப்பை
மழலையர் நாம் கொண்டாடுவோம்

# மனதுக்குள் விம்மும் குழந்தை



-மாலினி மாலா.

அது நடந்து ஒரு சில மாதங்கள் இருக்கும். off செய்து வைத்திருந்த செல்லிடப் பேசியை எடுத்துப் பார்த்தபோது நண்பியின் கணவர் திரும்பத்திரும்ப call எடுத்திருப்பது தெரிந்தது. அன்றைய நாளில் அந்த நேரம் நான் வீட்டில் இல்லை ஒரு பயணத்திலிருந்து திரும்பிக் கொண்டிருப்பேன் என்பது தெரிந்தும் எதற்காக இத்தனைமுறை முயன்றிருக்கக்கூடும் என்று யோசித்தபடி பேசியை உயிர்ப்பித்துப் பேசியதும் நண்பியின் தாயார் இறந்துவிட்ட செய்தியைச் சொன்னார்.

அதை இத்தனை முறை முயன்று எனக்குச் சொல்லுமளவு அவசியமேதுமில்லையே. பொதுவாக வெள்ளையர்கள் குடும்ப உறவுகளுடனேயே தங்கள் இன்ப துன்பங்களை முடித்துவிடுவது வழக்கம் என எண்ணிக் கொண்டு, வந்ததும் அவளுடன் பேசுகிறேன் என்றேன். இல்லை வந்ததும் நீ வா அவர்களது உறவுகள் நாட்டவர்கள் இருக்கும் போது, வா என்ற கட்டாயம் உறுத்தலாக இருந்தது.
மரணத்துக்கடுத்த ஏனைய நடைமுறைப் பதிவுகளுக்காக அப்போதும் உடல் வீட்டிலேயே இருந்தது அந்த உடலுக்குப் பாத்தியப்பட்டவள் அவள் ஒருத்தி மட்டும்தான் என்பதால் தனியாகத் தாயருகே நிறுத்தமின்றி அழுதுகொண்டிருந்தாள். கை பற்றியதும் தோளில் சாய்ந்தாள். அவள் என்னோடு நெருங்கிக் கொள்ள இருவருக்குமிடையே ஒரு பொதுவான புரிதலுக்கான காரணமிருந்தது.
சில அம்மாக்களிடம் பொதுவில் ஒரு குணவியல்பிருக்கும், பிள்ளை என்பது எம் சொத்து என்பதாக, நமது சிந்தனையோட்டம் தாண்டி அவைகள் சிந்திக்கவே கூடாது என்பதாக. தமது கைப்பொம்மைதான் பிள்ளை என்பதாக, ஒற்றைப் பிள்ளைகளின் பெற்றோர், அல்லது பரந்து சிந்திக்க மறுக்கும் தனிப் பெற்றோர், தம்மீது பரிதாபமோ பாசமோ ஒன்றை நிறையவைத்து அதை நம்பவைத்து பிள்ளையைக் களிமண் ஆக்கிவிடும் பக்குவமும் சிலருக்குக் கைவரும். அவர்களைப் பொறுத்தவரை அதீத பாசம் அல்லது பாதுகாப்புணர்வு என அவர்கள் அதை வரையறுத்துக் கொண்டாலும் இயல்புக்கு மாறான அதீத நெருக்குதல்கள் பிள்ளைகளை அவர்களிடத்திலிருந்து தூரமாக்கும் என்பதற்கு அவள் ஓர் உதாரணம்.

அவள் சொன்ன கதைகளில் அவளுக்கும் அவள் அம்மாவுக்கும் ஒரு விடயத்திலனும் ஒத்துவந்ததாக ஒருபோதும் நான் அறிந்ததில்லை. இப்போதைய அவளது நிறுத்தமின்றிய அழுகை, இழப்பின் பின்னான குற்றவுணர்வாக இருக்கலாம் எனத்தான் அப்போது எண்ணினேன். அதன் பின் ஒன்றரை வாரத்தின்பின் உடல் அடக்கம் செய்யும்வரை ஒவ்வொரு நாளும் அரைமணி நேரமேனும் அவளிடம் சென்று அவளது கைப்பற்றி இருந்துவிட்டு வருவதென வைத்துக் கொண்டேன். அது அவளுக்கு நான் செலுத்த வேண்டிய கடனின் ஒரு பகுதியும் கூட.

அப்போதும் அவள் அனேகமாக மனிதர்களை அனுமதிக்காமல் தனித்திருந்தாள்.
நிறுத்தாமல் அழுதுகொண்டேயிருந்தாள். அவள் தன் பிள்ளைகளை கடிந்ததில்லை எப்போதும் கையணைப்புக்குள்ளேயே வளர்த்தாள். தமக்கு எது கிடைக்கவில்லையோ, தாம் எதற்க்காக ஏங்கினோமோ அதை பிள்ளைகளுக்கு நிறைத்து நிறைத்துக் கொடுப்பது பாசமுள்ள ஒவ்வொரு பெற்றோரின் வழக்கமாக இருக்கும். அணைப்புக்காகவும், கடியாத வார்த்தைகளுக்காகவும், சுய இயங்குதலுக்காகவும் ஏங்க வைத்ததாக, பொறுமையற்று எப்போதும் தன்னோடு சண்டை போட்டதாக, அவள் எப்போதும் தாய் மீது குறை கொண்டவளாகவே இருந்தாள்.

வாழ்வின் பாதையை அதன் இயல்போடு ஏற்றுக் கடக்க முயல்பவள் இப்போது இப்படி ஓய்வற்று அழுவது விநோதமாக இருந்தது. தன் பணியிடத்தில் முக்கிய பொறுப்பிலிருப்பவள், வேலையை மறந்துவிட்டு ஒருமாதம் கடந்த பின்னும் கண்ணீர் வடிய வீட்டிலிருந்தாள்.
பகல்களில் வீடுலொடுங்கி, இரவுகளிலும் சாமங்களில் எழுந்திருந்து அழுதுகொண்டிருப்பதாக அவளது கணவன் சொன்னபோது அதிசயமாக இருந்தது.

பொதுவாக ஒற்றைப் பிள்ளைகளின் குணவியல்பு மற்றையோரிலிருந்து சற்றேனும் மாறுபட்டதாக இருக்கும். அதிகம் கூட்டத்துக்குள் தம்மைத் திணிப்பதும், தம் மனதுக்குள் நெருக்கமானோரிடம்கூட இலகுவில் நெருக்கத்தை வெளியே உணர்த்துவதுமில்லை அவர்கள். ஏதோ ஒருவிதத்தில் தம்மைப் போல என உணரும் மனிதர்களோடு மட்டுமே மிகுந்த அவதானிப்பின் பின் நெருங்குவார்கள், மனம் திறப்பார்கள். அவளும் அப்படியான அத்தனை குணவியல்புகளையும் கொண்டிருந்ததில் தனக்குள் என்ன உடைகிறது என்பதைக்கூட புரிய முடியாதவளாக, வெளிப்படுத்தாத்வளாக இருந்தாள்.
உறவுகள் மீது அதிக கொண்டாட்டமில்லாதவள் இப்போது இன்னும் தூரமானாள்.
அன்பும் புரிதலுமான கணவனிடமும், அதிசயமாகச் சீறிவிழத் தொடங்கினாள். பிள்ளைகளிலிருந்து தொலைவாகி அழுவதற்கு மட்டுமே நேரமொதுக்கினாள். கைபேசியில் அனைத்துத் தொடர்பிலக்கங்களையும் அழித்து விட்டு, தொடர்புகளற்று மூலையுள் சுருண்டாள் வற்றாத கண்ணீருடன்.
வைத்தியரிடம் வருகிறாயா என்றபோது மறுபேச்சுப் பேசாமல் கூட வந்தாள். ஒரு காலத்தில் என்னை அணைத்துக் கொண்டு அலைந்தவள் சிறு குழந்தைபோல அழைத்த அழைப்புக்கெல்லாம் தலையாட்டுவது கவலையாக இருந்தது.

ஆனாலும் வெள்ளையர்களிடம் ஒரு வழக்கம் உடலைப்போல மனதும் நோய்ப்படும் என்ற உண்மையை இயல்பாக ஏற்றுக்கொண்டு சிகிச்சைக்கு உட்படக் கூடியவர்கள்.
எனினும் தன்னை, தன் உடைவை, தன் இனத்துக்குள் உறவுக்குள் வெளிக்காட்ட விரும்பாத அளவு நம்பிக்கையற்றவளாக, அல்லது மறைக்க விரும்புபவளாக இருந்தாள்.
அவளுக்கான நத்தார் பரிசுப் பொதியுடன் போனபோது கட்டியணைத்து நீண்ட நாட்களின் பின் கண்ணீரில்லாமல் வரவேற்றாள்.

மனநலச் சிகிச்சைகள், மன ஆரோக்கிய மையத்தில் தங்கியிருந்து ஆற்றுப் படுத்தல் என முதற்கட்டச் சிகிச்சை முடிந்து திரும்பியிருக்கிறாள். அதன் விளைவு கைகளைப் பற்றிக்கொண்டு காத்திருந்தது போல, இத்தனை காலம் தன்னுள் அடக்கி இறுகியிருந்த மனதைத் திறந்து கொட்டத் தொடங்கினாள்.
உற்சாகமாக, பணியில் கெட்டிக்காரியாக சந்தோசமானவளாக வெளியே அறிமுகமாகியிருந்த அவள் தாயின் கைகளைப் பற்றிக் கொண்டு நடக்கும் வயதிலேயே மனதில் இறுகத் தொடங்கியிருந்தது தொடங்கி அவளுடன் கூடவே வளர்ந்து இறுகி அவளை உலைக்கும் அத்தனையும் மடையுடைத்தன.
நம் எல்லோருக்கும் மனதின் முதற் பாதிப்பு எங்கே ஆரம்பமாகிறதோ அந்தக் குழந்தையை உள்ளே சுமந்து கொண்டே வளர்கிறோம். மனம் உடைபட்ட குழந்தை உள்ளேயிருந்து விசித்து விசித்துக் கொண்டே தன் காயங்களை வளர்த்துக் கொள்கிறது.

நாம் பெரியவர்களான பின்னும் அது குழந்தையாகவே உள்ளே அமர்ந்திருக்கிறது. இனிப் போதும் என்ற ஓர் கணத்தில் அது எம்மைப் பிளந்து கொண்டு வெளிவந்து கதறுகிறது அல்லது மூர்க்கம் கொள்கிறது. இத்தனை கால வலிகளுக்கும் கொடுத்தவர்களுக்கும் முன்னே பெரு நெருப்பென கனன்று வெடிக்கிறது. அவளும் அதிலொரு வகை.

சுயபுரிதலுக்காக வைத்தியர்கள் சிபாரிசு செய்யும் Stefanie Stahl எழுதிய Das Kind in dir muss Heimat finden மேற்குறிப்பிட்ட நூலும் மனதின் அவலக் கூச்சலுக்கான விடையை அப்படித்தான் சொல்கிறதென நினைக்கிறேன். வேற்றுமொழிகளில் இருக்கிறதா தெரியவில்லை விரும்பினால் தேடிப்பாருங்கள்.
பிஞ்சு மனங்களைக் காயப்படுத்துவதில்லையான ஒரே உறுதிமொழியையேனும் சிசுபாலன் பிறந்த நாளின் நற்செய்தியாகக் கொள்வோம். மனதில் வலிக்கிறதா புரையோடி இற்றுப்போகுமுன் தயங்காது வைத்திய உதவி நாடுவோம். ஒருவரின் ஆரோக்கியமான இருப்பு என்பது அவர்களை நேசிக்கும் பலருக்கான ஆறுதல்.□




Sandra (4år)




Mira (4år)



Ignash (4år)



Gabriel (4år)




Bergen Tamilsk Avis
Ansvarlig redaktør: Julius Antonipillai - Adresse: Krohnegården 5b, 5146 Fyllingsdalen.- Telefon: 924 636 74
E-Post: ttoosai@gmail.com / antonipillai@hotmail.com Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440
VIPS: 729129 - Konto: 3626 31 78585 (Print ISSN: 2703-8785)